**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .196/2014** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : அழகு பிரபாகரன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | கோதண்டன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(A1, A2 absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **18.03.2024**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது நானும் எனது அம்மாவும் கேரளாவில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது அப்பா ஆவார். 18.07.2017 ம் தேதி எனது அப்பா இறந்துவிட்டார். 2014 ம் ஆண்டு A.இராமநாதபுரத்தில் குடியிருந்தோம் . எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு சித்தப்பா மற்றும் சித்தியாவார்கள். எனது அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கு சொத்து பிரச்சனை இருந்து வந்தது அடிக்கடி சித்தப்பா குடித்து விட்டு தகராறு செய்வார். நான் அப்போது B.E Mechanical Engineering படித்து கொண்டிருந்தேன். ரம்ஜான் விடுமுறையை முன்னிட்டு ஊருக்கு வந்திருந்தேன். கடந்த 29.07.2014 ம் தேதி நான் காலை 11.00 - 12.00 மணியளவில் காலேஜ்க்கு செல்வதற்காக கிளம்பி கொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் வீட்டிற்குள் நுழைந்து வீட்டில் இருந்த என்னையும் அம்மா, அப்பாவையும் அசிங்கமாக பேசினார்கள். 1வது எதிரி கையில் வைத்திருந்த கம்பால் எனது அப்பாவை முதுகில் அடித்ததில் அவருக்கு ஊமை காயம் ஏற்பட்டது. விலக்க வந்த என்னை 1வது எதிரி கம்பால் இடது கையில் அடித்ததில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு தொடையில் 2 வது எதிரி கம்பால் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டது. மேலும் எதிரிகள் அசிங்கமாக பேசியும் வீட்டிலிருந்த டிவி. மற்றும் அலமாரியில் இருந்த பொருட்கள், பாத்திரங்களை அடித்து உடைத்தார்கள். சேதாரம் சுமார் ரூபாய் 5000 முதல் 10000 வரை சேதமானது. எதிரிகள் என்றைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள். அப்போது சத்தம் கேட்டு வந்த சாட்சிகள் மாயாண்டி, கல்யாணி

எதிரிகளை சத்தம் போட்டார்கள். எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் எனது அப்பாவுடையது தான். (**அந்த கையொப்பம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை )**

S.d./Azhagu Prabhakaran
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.